28th March 1969]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மற்ற அலுவலகங்களில் பணிபுரிகிறவர்கள் விஷயம் வேறு. குருதிக்கொடை அளிப்பவர்கள் தங்கள் மனமொப்பி அளிக்கிறார்கள். நல்ல எண்ணத்தோடு சமுதாயத் திற்குச் செய்கின்ற இந்தத் தொண்டிற்கு ஆதரவாக பல சமுதாயப் பணியாளர்கள் மக்களிடையே பேசிவருகிறார்கள். ரூ. 7-ஐ ரூ. 10 ஆக்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. இந்த ஆண்டு அது நடைபெறவில்லை. விரைவில் அது வரலாம்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTI : Sir, may I know the rate at which blood is being supplied to the patients ?

THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU : No particulars are with me now about the rate at which blood is being given to the patients.

திரு. டி. சந்தோஷம் : இந்தத் தொகையை உயர்த்தவேண்டுமென்று போராட்டம் நடத்தவில்லை யென்றாலும் கூட அகிம்சா முறையில் ரத்த தானம் செய்வதில் அநேகம் பேர் ஒத்துழையாமை செய்கிறார்கள். அதனால் இப்போது அரசாங்க ஆஸ்பத்திரிகளில் ரத்த இருப்பு குறைந்து வருகிறது. பிரைவேட் ஆஸ்பத்திரிகளில் ரூ. 15 முதல் ரூ. 20 வரையில் கொடுக் கிறார்கள். அரசாங்கம் இதில் கவனம் செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இது அரசாங்கத்தின் கவனத் தில் இருக்கிறது. ரூ. 7 இருப்பதை ரூ. 10 ஆக்கவேண்டுமென்று பரிசீலனை செய்துவருகிறோம். இன்னும் முடிவு எடுக்கவில்லை.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : அரசாங்க மருத்துவ மனைகளைத் தவிர வைத்திய தொழில் புரியும் தனிப்பட்ட மருத்துவர்கள் ரத்தத்தை சேகரித்து வைத்துக்கொள்வதற்கு அனுமதியிருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கனம் உறுப்பினர் அவர் கள் கூறியதிலிருந்து தனியார் மருத்துவ மனைகளில் அப்படி ரத்தம் சேமித்து வைத்திருப்பது போலத் தெரிகிறது. ஆனால் இங்குள்ள குறிப்பில் அதைப்பற்றிய தகவல் இல்லை.

X-Ray apparatus in Government Hospitals.

* 270Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN) : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(a) the reasons for the frequent disrepair of the X-Ray apparatus in the Government Hospitals ; and

(b) the steps taken to prevent this ?

அரசு மருத்துவச்சாலை நிழற்படக் கருவிகள்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு. என். ஆர். தியாகராஜன் சார்பில்) : மாண்புமிகு சுகாதார-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சர்க்கார் மருத்துவச் சாலைகளில் உள்ள நிழற்பட கருவிகள் அடிக்கடி கெட்டுப்போவதற்கு காரணம் என்ன ?

(இ) இதைத் தடுக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

[28 March 1969

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) பழமையின் காரணத்தாலும் அதிகமான அளவுக்கு படம் எடுப்பதாலும் மருத்துவமனைகளிலுள்ள நிழற்படக் கருவிகள் பழுதடைகின்றன.

(இ) தஞ்சை, மதுரை, கோயம்புத்தூர் நகரங்களிலுள்ள "ஜோனல் ரேடியோகிராபர்களும்" சென்னையிலுள்ள "பிரதம நிழற்பட நிபுணரும்" பழுதடைந்த நிழற்படக் கருவிகளை பழுது பார்க்கிறார்கள். மேற்கண்டவர்களாலும் பழுது பார்க்க முடியாத நிழற்படக் கருவிகளை, அவைகளை நிறுவிய நிறுவனங்களே பழுது பார்த்து தருகிறார்கள்.

THIRU A. R. DAMODARAN : Sir, this X-ray apparatus frequently goes out of commission, especially in the South Arcot district headquarters hospital in Cuddalore, and it is stated that adequate number of mechanics are not available for repairing it. May I know whether the Government have any scheme to train proper mechanics at Madras at least and ask them to inspect the headquarters hospitals periodically so that these X-ray units may be maintained in working condition ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கடலூரைப் பொருத்த வரையில் இல்லையென்றாலும் தஞ்சையில் இஞ்சினியர், ரேடியோகிராபர் இருக்கிறார்கள். இவைகளை யெல்லாம் திருத்துவதற்கோ பழுது பார்ப்பதற்கோ அவர்கள் கடலூருக்குச் செல்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனாலும் பழுதடைந்த இயந்திரங்களை அவ்வப்பொழுது பரிசீலனை செய்ய வேண்டுமென்பதற்கு டைரக்டர் ஆஃப் மெடிகல் எஜுகேஷன் சில ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் ஒரு எக்ஸ்ரே இன்சினியர், ஒரு சீப் எக்ஸ்ரே டெக்னிஷியன், அதைப்போன்று ரேடியோகிராபர் "It is necessary to train some of the radiographers in basic electrical engineering" என்று அமைத்து, ரேடியோகிராபர்கள் சிறிய பழுதுகளைப் பார்ப்பதற்குப் பயிற்சி அளிக்கவேண்டுமென்றும் அரசாங்கத்திற்கு மெடிகல் எஜுகேஜன் டைரக்டர் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. அது நிறைவேற்றப்பட்டால் தனியாக சீஃப் டெக்னிஷியன்களை அரசாங்கத்தின் சார்பில் பழுதுபார்க்கும் வேலைக்காக ஏற்பாடு செய்ய முடியுமென்று நம்புகிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, when were the recommendations of the Director of Medical Education in this connection received ?

THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU : No specific date is mentioned here.

THIRU A. R. DAMODARAN : Sir, I just want to bring to the notice of the Hon. Minister that generally the Government take two or three years for coming to conclusions and in the meantime, people will die if the X-ray equipment is not in working condition. May I request the Hon. Minister to look into this matter as urgently as possible so that the recommendations of the Director of Medical Education may be either adopted or partially adopted or rejected ?

THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU : It will be expedited.